S.C.No. 41/2019

Date: 20.08.2024

அ.சா.2 சமுத்திரம்(எ) சமுத்திரபாண்டியன் , த/பெ. கருப்பசாமி

(1, 2 எதிரிகள் ஆஜர்)

**Crl.M.P.No. 14365/2024, 23.07.2024 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். அதன்பிறகு ஐ.டி.ஐ படித்துள்ளேன். நான் முதல்விசாரணையில் மும்பையில் வேலை பார்த்து வந்ததாக கூறியுள்ள வகையில் அங்கு எவ்வளவு காலம் வேலை பார்த்தேன் என்றால் சுமார் ஓராண்டு காலம் வேலை பார்த்தேன். கோவில்பட்டியில் இருந்து தட்டப்பாறை சுமார் 50 கி.மீ தொலைவு இருக்குமா என்றால், சுமார் 40 கி.மீ-க்கு மேல் இருக்கும்.

2. கோவில்பட்டியில் இருந்து பாதையாத்திரை கிளம்பியதாக முதல்விசாரணையில் கூறியுள்ளவாறு எப்போது கிளம்பினோம் என்றால் சம்பவத்திற்கு முந்தைய நாள் மாலை சுமார் 06.00 மணியளவில் கிளம்பினோம். போலிஸ் விசாரணையில் மேற்கண்டவாறு முந்தைய நாள் மாலை சுமார் 06.00 மணியளவில் கிளம்பிய விபரத்தை நான் சொன்னேனா என்றால், போலிசார் வந்தபோது நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன். எத்தனை நாட்கள் நான் சுயநினைவு இல்லாமல் இருந்தேன் என்றால், சுமார் 4, 5 நாட்கள் இருந்தேன்.

3. போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால், தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்து

விசாரித்தார்கள். 1வது எதிரி ஆறுமுகம் மற்றும் அவரது குடும்பத்தினர் 2012ம் ஆண்டே கோவில்பட்டியில் இருந்து தாளையூத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். கோவில்பட்டி கிழக்கு, மேற்கு காவல்நிலையங்களில் என் மீதும், என் சகோதரர் மீதும் பல வழக்குகள் இருக்கின்றன என்றால், 2012 வரை வழக்கு எதுவும் கிடையாது. அதன்பிறகு தான் தற்போது கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் 3, 4 வழக்குகள் இருக்கிறது.

4. கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் செல்லத்தாய் என்பவரை நான் கொலை செய்ததாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருக்கிறது என்றால் சரிதான். என் மீது விளாத்திக்குளம் காவல்நிலையத்தில் போலிசாரை நான் தாக்கியதாகவும், பணி செய்யவிடாமல் தடுத்ததாகவும் ஒரு வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு வழக்கு எதுவும் கிடையாது. கயத்தாறு காவல்நிலையத்தில் என் மீது உயிருக்கு ஆபத்தான வெடிபொருட்களை வைத்திருந்ததாகவும், கள்ளச்சாராயம் வைத்திருந்ததாகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தவறு.

5. பொதுவாக ஒரு குற்ற வழக்கில் இரத்தம்பட்ட பொருட்களை போலிசார் கைப்பற்றுவார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் நடந்ததாக சொல்லியுள்ள சம்பவத்தின்போது எனது ஆடைகளில் இரத்தக்கறை ஏற்பட்டதா என்றால் சரிதான். மேற்படி இரத்தகறை படிந்த எனது ஆடைகளை மருத்துவமனையில் வைத்து காவல்துறையினரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு நினைவு திரும்பவே 4,5 நாட்கள் ஆகிவிட்டது.

சாட்சி தானாக கூறுகிறார், " எனது தாயார் அவ்வாறு கொடுத்திருக்கலாம். எனக்கு சரியாக தெரியாது."

6. எனது உடன்பிறந்த அண்ணன் மாணிக்கராஜா மீது கோவில்பட்டி கிழக்கு, மேற்கு காவல்நிலையத்தில், விருதுநகர் மாவட்டம் வம்சாபுரம் காவல்நிலையத்திலும் வழக்குகள் இருக்கிறது என்றால், சில வழக்குகள் இருக்கிறது. எந்த காவல்நிலையம் என்று தெரியாது. நான் தனியாகதான் இருந்துவருகிறேன். மேற்படி வழக்குகள் பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றும், அவை குறித்து கூறினால் இவ்வழக்கிற்கு எதிராக அமையும் என்பதால், நான் வேண்டுமென்றே மறைக்கின்றேன் என்றால் சரியல்ல.

7. வம்சாபுரம் காவல்நிலையத்தில் தொடரப்பட்ட கொலை வழக்கு இன்றுவரை என் சகோதரர் மீது நிலுவையில் இருக்கிறது என்றால் தெரியாது. கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட நபரை கொலை செய்தது சம்பந்தமாக திருநெல்வேலி பி.சி.ஆர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது உடன்பிறந்த அக்காவின் கணவரான வழக்கறிஞர் மணிகண்டன் என்பவரை கொலை செய்தது சம்பந்தமாக ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது.

8. எனது அண்ணன் மீது 55 வழக்குகள் இருப்பதாக கூறி போலிசார் கைது செய்ய முயற்சித்தபோது அவர் தப்பி ஓட முயன்றதால் அவர் மீது துப்பாக்கி சூடு நடத்தி அவர்பிடிக்கப்பட்டார் என்றால், அப்போது நான் கோவில்பட்டியில் இல்லை. அதனால் விபரங்கள் எனக்கு தெரியாது. சுடப்பட்டார் என்று மட்டும் தெரியும். பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள காரணத்தினால் எங்கள் குடும்பத்திற்கு பல விரோதிகள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. தவறு.

9. நான் முதல் விசாரணையில் தாக்கப்பட்டதாக கூறியுள்ள கிராமம் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக உள்ள கிராமம் என்றால் எனக்கு தெரியாது. நான் அவ்வழியாக வந்தேன். நான், எனது அண்ணன் மற்றும் குடும்பத்தினர் மீது தாழ்த்தப்பட்ட மக்களை கொலை செய்ததற்காக இரண்டு வழக்குகள் இருந்துவரும் காரணத்தினால் சம்பவத்தின்போது அடையாளம் தெரியாத சிலர்தான் முன்விரோதம் காரணமாக என்னை வெட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. தவறு. என்னை எதிரி ஆறுமுகம்தான் என்னை அப்போது வெட்டினார்.

10. சம்பவத்திற்கு முந்தையநாள் எத்தனை கி.மீ தூரம் பாதையாத்திரையாக நடந்து சென்றிருப்போம் என்றால் சுமார் 25 கி.மீ நடந்து சென்றிருப்போம். அவ்வாறு 25 கி.மீ நடப்பதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் நள்ளிரவு 3 மணி ஆகிவிட்டது. அதாவது சுமார் 9 மணி நேரமாகிவிட்டது என்றால் சரிதான். பொதுவாக முருகன் கோவிலுக்கு பாதை யாத்திரை செல்லும் பக்தர்கள் அதிகாலையில் பாதையாத்திரைக்கு கிளம்புவார்கள் என்றால் சரிதான். நாங்களும் அவ்வாறுதான் அதிகாலையில் கிளம்பி சென்றோம் என்றால் சரிதான். அவ்வாறு அதிகாலையில் கிளம்பி வேறு எங்கும் ஓய்வு எடுக்காமல் நேரடியாக வந்து கொண்டிருந்தோம் என்றால் சரிதான். மறுநாள் அதிகாலை 05.00 மணிக்கு கிளம்பிவிட்டோமா என்றால் இல்லை. இரவு நேரம் அதிகமாகிவிட்டதால் அதிகாலை 06.00 மணிக்குதான் கிளம்பினோம்.

11. நான் முதல் விசாணையில் கூறியுள்ளவாறு சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன மாதிரி ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் வேறு இடத்தில் வைத்து எனக்கு இருந்த பல்வேறு எதிரிகளில் ஒருவரால்தான் தாக்கப்பட்டுள்ளேன்

என்றால் சரியல்ல. 1வது எதிரி தன் குடும்பத்துடன் 2012ம் ஆண்டே கோவில்பட்டியை விட்டு வேறு ஊருக்கு சென்றுவிட்ட நிலையில் கோவில்பட்டியில் உள்ள அவர்களது வீட்டை எனது அண்ணன் கதவை உடைத்து அந்த வீட்டில் இருந்த பொருட்களையெல்லாம் திருடி, அந்த வீட்டை ஆக்கிரமித்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. அதற்கு 1வது எதிரியால் எந்த காலத்திலும் இடைஞ்சல் ஏற்படக்கூடாது என்பதற்காக எனது அண்ணன் மாணிக்கராஜா என்பவரின் தூண்டுதலின்பேரில் ஒரு பொய்யான புகார் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டு இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:-</u>**

1. 2வது எதிரி துரைப்பாண்டிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பந்தம் இருக்கிறது. எனது முதல் விசாரணையில் 2வது எதிரி துரைப்பாண்டி, 1வது எதிரி ஆறுமுகத்தை பார்க்க அவருடைய வீட்டிற்கு வந்த வகையில், 2வது எதிரியை எனக்கு தெரியுமென நான் கூறியுள்ள விபரத்தை போலிசார் விசாரணையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

2. சம்பவத்தின்போது என்னை தாக்க பயன்படுத்தப்பட்ட அரிவாள் என்ன வகையான அரிவாள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிட்டு கூறியுள்ளேன். கோவில்பட்டியில் இருந்து திருச்செந்தூருக்கு எங்கள் ஊரில் இருந்து சுமார் 10 நபர்கள் கிளம்பி வந்து கொண்டிருந்தோம் என்ற விபரத்தையும் போலிஸ் விசாரணையில்

குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் குறிப்பிட்டு கூறியுள்ளேன்.

3. காவல்துறையினர் விசாரணையின்போது 2வது எதிரி எனது பின்பகுதியில் இருந்து வெட்டினார் என்ற விபரத்தையும் கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன். 2வது எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசினார் என்ற விபரத்தையும் நான் காவல்துறையின் விசாரணையின்போது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன். காவல்துறையின் விசாரணையின்போது எனது இடது கால் தொடையிலும், இடது கால் முட்டிக்கு கீழும் 2வது எதிரி வெட்டினார் என குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் வெட்டுபட்டவுடன் என்னை காப்பாற்றுங்கள் என்னை காப்பாற்றுங்கள் என சத்தம் போட்டதாக காவல்துறையின் விசாரணையின்போது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன். அருகில் இருந்தவர்களை யாரேனும் வந்தால் எனக்கு ஏற்பட்ட கதி தான் அவர்களுக்கும் ஏற்படும் என கொலை மிரட்டல் விடுத்ததாக எதுவும் காவல்துறையின் விசாரணையின்போது நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன்.

4. காவல்துறையின் விசாரணையின்போது அ.சா.4 மாணிக்கதுரை, அ.சா.1 கணேசன், அ.சா.3 மாரிசெல்வம், அ.சா.5 சின்ன ஜமீன், அ.சா.8 ரவிக்குமார், சாட்சி மணிகண்டன் ஆகியோர் என்னுடன் வந்திருந்ததாக எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியுள்ளேன். அ.சா.6 முத்துபாண்டி நடந்த சம்பவத்தை நேரில் பார்த்தார் என காவல்துறையின் விசாரணையின்போது குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளேன். சம்பவ இடத்தில் நான் மயக்கமாகிவிட்டதால், அதன்பின்பு சம்பவ இடத்திலிருந்து

மருத்துவமனைக்கு எவ்வாறு சென்றேன் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன்பிறகு உடன் இருந்தவர்கள் கூறி தெரிந்து கொண்டேன். அதாவது 5 நாட்கள் கழித்து தெரிந்து கொண்டதாக கூறுகிறேன் என்றால் சரிதான். 2வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

5. தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவரின் ஆலோசனையின்படி நான் சிகிச்சை பெறவில்லை என்பது எனக்கு தெரியும் என்றால், அப்போது தெரியாது. பின்னர்தான் தெரியவந்தது. எனது பெயர் சமுத்திரம்(எ)சமுத்திரபாண்டியன் என்றால் சரிதான். நான் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டபோது என்ன பெயர் விபரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவரிடம் எனக்கு எவ்வாறு காயங்கள் ஏற்பட்டது என்று யார் குறிப்பாக கூறினார்கள் என்பதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். உடன் இருந்தவர்கள் கூறியதாக பின்னர் தெரியவந்தது.

6. காவல்துறையினர் சொன்னதன்பேரில்தான் 2வது எதிரியின் பெயர் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் காவல்நிலையத்தில் வைத்து 2வது எதிரியை பார்த்து இவர்தான் என்னை வெட்டினார் என அடையாளம் காண்பித்தேனா என்றால் அவ்வாறு காண்பிக்கவில்லை. 2வது எதிரி பயன்படுத்திய கோழி அரிவாள் பொதுவாக சந்தையில் இயல்பாக கிடைக்கக்கூடியது என்றால் தெரியாது. அந்த அரிவாள் இன்னாரிடம்தான் இருக்கும் என்ற வகையில் தனிப்பட்ட அடையாளம் கிடையாது என்றால் சரிதான். பொதுவாக பாதையாத்திரைக்கு செல்லும்போது எனக்கு தேவையான தண்ணீர் பாட்டில், திருநீறு போன்ற

பொருட்களை வைத்திருப்பேன் என்றால் சரிதான், மாற்று ஆடையும் சேர்த்து பையில் வைத்திருப்பேன். அவ்வாறு நான் வைத்திருந்த பை, பொருட்கள் சம்பவத்திற்கு பின் என்ன ஆனது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். அன்றையதினம் நான் என்ன ஆடை அணிந்திருந்தேன் என்றால் டிராக் பேண்ட், டீ-சார்ட்ம் அணிந்திருந்தேன்.

7. நான் சொன்ன நாள் , சொன்ன நேரத்தில் கோவில்பட்டியில் இருந்த திருச்செந்தூருக்கு பாதையாத்திரையாக செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் 2 வது எதிரியால் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அவ்வகையில் காயங்கள் எதுவும் எனக்கு ஏற்படவில்லை என்றும், அடையாளம் தெரியாத நபரால் ஏற்பட்ட காயத்தை வைத்து, உண்மையான எதிரியை கண்டுபிடிக்க இயலாததால் 2 வது எதிரியை இவ்வழக்கில் போலிசார் கூறியதன்பேரில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் கூறியதன்பேரிலும் சம்பவம் உண்மை என்பதால் போலிசாரிடம் சொல்லாத விஷயத்தை சொன்னதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** இல்லை

ஒம்/-P.V.வஷீத்குமார்,
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**